ஸ்ரீ:

ப்லவ ஸ்ரீ சித்திரை மீ
ஏப்ரல் - மே 2021

மலர்: 4
இதழ்: 1

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email: svdd.mylai@gmail.com, web: www.svdd.com





பங்குனி மாதப்பிறப்பு உத்ஸவம்

ப்லவ ஷு சித்திரை மீ
ஏப்ரல் - மே 2021

மலர்: 4
இதழ்: 1

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

**ஞாயிறு முதல் புதன் வரை**

| | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

**வியாழன் முதல் சனி வரை**

| | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் | ஸ்ரீ R. ராகவன் | ஸ்ரீ அழிசூர் R. ராகவன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: yeSKay



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

'தேஶிக ஸந்தேஶம்' எனும் இக்குழந்தைக்கு மூன்று வயது நிறைவடைந்துள்ளது. இது மேன்மேலும் தேஜஸ், ஆயுள், ஆரோக்யத்துடன் வலம் வர எம்பெருமானின் திவ்யாநுக்ரஹத்தை வேண்டி இந்தத் தமிழ்ப் புத்தாண்டான 'ப்லவ' வருஷத்தைத் தொடங்குவோம்!

பகவத் கைங்கர்யங்கள் ஆஜ்ஞா மற்றும் அநுஜ்ஞா என இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சாஸ்த்ரங்களில், அவச்யம் செய்யவேண்டுவனவாக விதிக்கப்பட்டுள்ளவை ஆஜ்ஞா கைங்கர்யங்களாகும். இவை எம்பெருமான் நமக்கு இட்டுள்ள கட்டளைகள். ஸந்த்யாவந்தனம், ச்ராத்தம், பித்ரு தினங்களிலும் க்ரஹண ஸமயத்திலும் பண்ணவேண்டிய தர்ப்பணங்கள் போன்றவை இதில் அடங்கும். இவற்றைச் செய்வதனால் தனியாக புண்யம் ஏதும் ஏற்படாது, ஆனால் இவற்றை பண்ணாமல் விட்டால் பாபம் ஸம்பவிக்கும்.

அநுஜ்ஞா கைங்கர்யங்கள் என்பவை விதிக்கப்படாதவை – அதாவது, கட்டாயம் செய்யவேண்டுவன என்பது கிடையாது, ஆனால் அவற்றைச் செய்வது புண்யத்தைத் தரும். திவ்யதேசங்களுக்குச் சென்று பெருமாளை ஸேவிப்பது, உத்ஸவங்களில் வேத, திவ்யப்ரபந்த, ஸ்ரீபாத கைங்கர்யங்கள், த்ரவ்ய ஸஹாயம் செய்வது, ததீயாராதனம் பண்ணுவது, திருக்கோயில்களில் தீபங்கள் ஏற்றுவது, கோலமிடுதல், மாலை, புஷ்பம் ஸமர்ப்பிப்பது போன்ற எம்பெருமானின் உகப்புக்காகச் செய்யப்படுபவை இதில் சேரும்.

இவ்வகையில், ஸ்வாமி தேசிகன் மற்றும் பூர்வாசார்யர்களின் திருவுள்ளங்களை ப்ரதிபலிக்கும் வ்யாஸங்கள், நம் தேவஸ்தானத்தில் நடைபெறும் உத்ஸவங்கள் மற்றும் அவற்றின் வண்ணப்படங்களைத் தாங்கி வரும் நம் 'தேஶிக ஸந்தேஶம்' இதழ் வெளியீட்டிற்கு உபகாரமாக இருப்பது சிறந்த அநுஜ்ஞா கைங்கர்யமாகும்.

விளம்பியில் தொடங்கி இம்மூன்று ஆண்டுகள் இதில் பங்காற்றிய, பதிப்புச் செலவிற்குப் பொருள் உதவிய ஆஸ்திகோத்தமர்களுக்கு, அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறையும் மார்பனான ஸ்ரீ ஸ்ரீநிவாஸன், தமிழ்த்தலைவன் பேயாழ்வார், ஆசார்ய வள்ளல் ஸ்வாமி தேசிகன் ஆகியோரது பரிபூர்ண அநுக்ரஹம் என்றென்றும் விளங்கும் என்பதில் எள்ளளவும் ஸந்தேஹமில்லை.

ஆண்டின் முதல் இதழில், சிறப்புக் கட்டுரைகளுடன் கீழ்க்கண்ட உத்ஸவங்களின் வண்ணப்படங்கள் இடம்பெற்றுள்ளன. கண்டு, வாசித்து இன்புறுமின்!

- ✓ பங்குனி உத்தரம் -– திருக்கல்யண உத்ஸவம் மற்றும் ஊர்கோல உத்ஸவம்
- ✓ பஞ்சபர்வ உத்ஸவங்கள்
- ✓ வெள்ளிக்கிழமை தாயார் உத்ஸவங்கள்

மழிசையர் கோன் உரைத்தவாறு, எம்பருமான் விஷயமாகவே எப்பொழுதும் 'தெரித்து எழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும்' பொழுதைப் போக்கிட நம் அனைவருக்கும் அவனே அருளுமாறு அவனையே அடிபணிந்து நிற்போம்!

ஸ்ரீ:

# Time Again For Circumspection And Restraint

FROM THE DESK OF TRUSTEES

Just as we started rejoicing the reduction in the spread of the COVID-19 pandemic for about two months or so, there has been a sudden surge in cases, with possibly a second wave sweeping the country, forcing the government to take several severe measures to contain the disease.

The State government has announced a cluster of restrictions, including one on places of worship. This has certainly dampened the spirit of not only the devotees but also us, the administrators.

Panguni Utharam Utsavam, the highlight of the last month, was celebrated with elan and it was followed by the Oorkola Utsavam the next day.

In Chithrai, the following festivals are scheduled:

- Sri Bashyakarar Utsavam (April 9 to 18)
- Sri Ramanavami Utsavam (April 13 to 22)
- The Tamil New Year Utsavam (April 14)
- Sri Srinivasar Avatatara Utsavam (April 25)
- Chitra Pournami festival & Madhurakavi Azhwar Satrumurai (April 26)

In addition, Sahasra Kalasa Thirumanjanam is slated to be conducted from May 2 to 4, and the Vaikasi Brhamotsavam is scheduled to be held from May 14 to 23.

There are plans to perform the above Utsavams in a simple manner, keeping in mind the government guidelines.

In view of the restrictions, the annual Chitra Pournami Utsavam when the Perumal visits Mambalam will not take place. Instead, it is likely to be conducted within the temple premises. Also, the annual Thotta Utsavam will be postponed to a later date.

We request all devotees and well-wishers to bear with us for the adjustments we have to make in the wake of the prevalent situation.

We thank one and all for the continued patronage. ❇


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் **'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'** தை மாதம் முதல் இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும் விவரங்களுக்கு:**

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004. போன்:
044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை – 600004.

ஸ்ரீ:

# ப்லவ வருட சித்திரை மாத பஞ்சாங்கம்

| ஆங்கிலம் | தமிழ் | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஏப்ரல் / மே | சித்திரை | | | | | |
| 14.04.2021 | 1 | த்விதீயை | புதன் | பரணி | ப்லவ – தமிழ் வருஷப்பிறப்பு – சித்திரை விஷு புண்யகாலம் – பாஷ்யகாரர் உத்ஸவம் 6ஆம் நாள் – ஸ்ரீ ராமநவமி உத்ஸவம் 2ஆம் நாள் – காலை – பாஷ்யகாரர் வீதி புறப்பாடு பின்பு பெருமாள், தாயார் மூலவர் உத்ஸவர், தேசிகன் உத்ஸவர், பாஷ்யகாரர் திருமஞ்சனம்; மதியம் – ராமர் திருமஞ்சனம் – மாலை – பொழுதுடன் திருஆராதனம் பெருமாள் வீதிபுறப்பாடு; பின்பு ராமர் உள்புறப்பாடு; இரவு – ராமர், பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | வருஷப்பிறப்பு – ஸ்ரீ T.D. விஜயராகவன் (P.D.R. ட்ரஸ்ட்) ராமநவமி உத்ஸவம் – ஸ்ரீ M.A. பார்த்தஸாரதி பாஷ்யகாரர் உத்ஸவம் – புரிசை ஸ்ரீ ராமக்ருஷ்ணன் |
| 15.04.2021 | 2 | த்ருதீயை | வியாழன் | க்ருத்திகை | பாஷ்யகாரர் உத்ஸவம் 7ஆம் நாள் – ஸ்ரீ ராமநவமி உத்ஸவம் 3ஆம் நாள் – காலை – பாஷ்யகாரர் வீதி புறப்பாடு. பின்பு ராமர் பாஷ்ய காரர் திருமஞ்சனம் – மாலை – ராமர் உள்புறப்பாடு – இரவு – ராமர் பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை . | பாஷ்யகாரர் உத்ஸவம் – ஸ்ரீமதி ஹேமலதா ரமாமணி, ராமநவமி உத்ஸவம் – ஸ்ரீ S. கோபாலன் |
| 16.04.2021 | 3 | சதுர்த்தி | வெள்ளி | ரோஹிணி | பாஷ்யகாரர் உத்ஸவம் 8ஆம் நாள் – ஸ்ரீ ராமநவமி உத்ஸவம் 4ஆம் நாள் – காலை – பாஷ்யகாரர் வீதி புறப்பாடு. பின்பு ராமர் பாஷ்ய காரர் திருமஞ்சனம் – மாலை – ராமர் உள்புறப்பாடு – இரவு – ராமர் பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | பாஷ்யகாரர் உத்ஸவம் – ஸ்ரீ R. முகுந்தன், ராமநவமி உத்ஸவம் – ஸ்ரீ M. சக்ரபாணி ஐயங்கார் குடும்பத்தினர் - C/o. ஸ்ரீ C. கேசவன் |
| 17.04.2021 | 4 | பஞ்சமி | சனி | ம்ருகசீர்ஷம் | பாஷ்யகாரர் உத்ஸவம் 9ஆம் நாள் – ஸ்ரீ ராமநவமி உத்ஸவம் 5ஆம் நாள் – காலை – பாஷ்யகாரர் வீதி புறப்பாடு. பின்பு ராமர் பாஷ்ய காரர் திருமஞ்சனம் – மாலை – ராமர் உள்புறப்பாடு – இரவு – ராமர் பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | பாஷ்யகாரர் உத்ஸவம் – ஸ்ரீ T.C. ரங்கராஜன் – ஸ்ரீ T.C. ஸ்ரீநாத் – ராமநவமி உத்ஸவம் – ஸ்ரீ K. ராமன் |
| 18.04.2021 | 5 | ஷஷ்டி | ஞாயிறு | திருவாதிரை | ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்ரம் – ஸ்ரீ ராமநவமி உத்ஸவம் 6ஆம் நாள் காலை – பாஷ்யகாரர் மங்களாசாஸனம். பின்பு பாஷ்ய காரர் வீதி புறப்பாடு. பிறகு பெருமாள், பாஷ்யகார் திருமஞ் சனம். மதியம் – ராமர் திருமஞ்சனம். மாலை – பெருமாள், பாஷ்யகார் வீதி புறப்பாடு பின்பு இராமர் உள் புறப்பாடு – இரவு – பெருமாள் – ராமர் – பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | மங்களாசாஸனம் – ஸ்ரீ S. ஸுந்தரம் – காலை – மாலை – பாஷ்யகாரர் உத்ஸவம் – A.S.V. சாரிடீஸ் – ராமநவமி உத்ஸவம் – ஸ்ரீ V.C. முரளிதரன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 19.04.2021 | 6 | ஸப்தமி | திங்கள் | புனர்வஸு / புஷ்யம் | ஸ்ரீ ராமநவமி உத்ஸவம் 7 ஆம் நாள் – காலை – ராமர் திருமஞ்சனம் – மாலை – ராமர் உள்புறப்பாடு – இரவு – ராமர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ ராம்ப்ரசாத் பார்த்தஸாரதி |
| 20.04.2021 | 7 | அஷ்டமி | செவ்வாய் | புஷ்யம் (03.35) | ஸ்ரீ ராமநவமி உத்ஸவம் 8 ஆம் நாள் – காலை – ராமர் திருமஞ்சனம் – மாலை – ராமர் உள்புறப்பாடு – இரவு – ராமர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீமதி ஸ்ரீநிதி மோஹன் |
| 21.04.2021 | 8 | நவமி | புதன் | ஆயில்யம் | ஸ்ரீ ராமநவமி உத்ஸவம் 9 ஆம் நாள் – காலை – ராமர் மூலவர் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – ராமர் உள்புறப்பாடு – இரவு – ராமர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | திருமஞ்சனம் (மட்டும்) – ஸ்ரீ பாஷ்யம் ஐயங்கார் குடும்பத்தினர். ஸ்ரீராமநவமி உத்ஸவம் – ஸ்ரீ அம்புஜம் அனந்ததராமன் |
| 22.04.2021 | 9 | தசமி | வியாழன் | மகம் | ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம். காலை ராமர் திருமஞ்சனம், மாலை பொழுதுடன் திருஆராதனம். பின்பு ராமர் வீதிபுறப்பாடு. | ஸ்ரீ T.V. கோபாலதேசிகன் |
| 23.04.2021 | 10 | ஏகாதசி | வெள்ளி | பூரம் | காலை பெருமாள் தாயார் மூலவர் தாயார் உத்ஸவர் திருமஞ் சனம். மாலை தாயார் யானை வாஹனத்தில் உள் புறப்பாடு | ஸ்ரீ மாடபூசி ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட் |
| 24.04.2021 | 11 | த்வாதசி | சனி | உத்தரம் | காலை – தாயார் திருமஞ்சனம். மாலை – தாயார் உள்புறப்பாடு | ஸ்ரீ S.V.S. ராகவன் |
| 25.04.2021 | 12 | த்ரயோதசி | ஞாயிறு | ஹஸ்தம் | திருஅவதார உத்ஸவம் – பெரு மாள், தாயார் மூலவர் – உத்ஸவர் திருமஞ்சனம். மாலை பொழுதுடன் திருஆராதனம். பின்பு பெருமாள் மங்களகிரியில் வீதிபுறப்பாடு | திருமஞ் சனம் – SVDD கைங்கர்யபரர்கள். புறப்பாடு – ஸ்ரீ L.V. நரசிம்மன் குடும்பத்தினர் |
| 26.04.2021 | 13 | சதுர்தசி / பௌர்ணமி | திங்கள் | சித்திரை | சித்ரா பௌர்ணமி (மதுரகவி ஆழ்வார் சாற்று முறை) | சித்ரா பௌர்ணமி கமிட்டி |
| 27.04.2021 | 14 | பௌர்ணமி / ப்ரதமை | செவ்வாய் | ஸ்வாதி | ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மர் மூலவர் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – ஆஸ்தானம் | |
| 28.04.2021 | 15 | ப்ரதமை (03.59) / த்விதீயை | புதன் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 29.04.2021 | 16 | த்ருதீயை | வியாழன் | அநுஷம் | ஸ்ரீமந் நாதமுனிகள் | |
| 30.04.2021 | 17 | சதுர்த்தி | வெள்ளி | கேட்டை | காலை பெருமாள் தாயார் மூலவர் தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை தாயார் தங்ககேடயத்தில் உள்புறப்பாடு | ஸ்ரீ மாடபூசி ஸுதர்சனம் ஐயங்கார் பண்ட் |
| 1.05.2021 | 18 | பஞ்சமி | சனி | மூலம் | திருமால்வடை | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2.05.2021 | 19 | ஷஷ்டி | ஞாயிறு | பூராடம் | இரவு – ஸஹஸ்ரகலசாபிஷேகம் அங்குரார்ப்பணம் | |
| 3.05.2021 | 20 | ஸப்தமி | திங்கள் | உத்தராடம் | கலச ஆவாஹனம் | |
| 4.05.2021 | 21 | அஷ்டமி | செவ்வாய் | ச்ரவணம் | காலை – ஸஹஸ்ரகலசாபிஷேகம். பெருமாள் தாயார் தேசிகன் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை பெருமாள் தேசிகன் வீதி புறப்பாடு. பின்பு தாயார் உள்புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸஹஸ்ரகல சாபிஷேகம் – ஸ்ரீ R. முகுந்தன்; ச்ரவணம் – ஸ்ரீ N.S. ஸ்ரீநிவாஸன் |
| 5.05.2021 | 22 | நவமி | புதன் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 6.05.2021 | 23 | தசமி | வியாழன் | சதயம் | காலை – பேயாழ்வார் திருமஞ் சனம். மாலை – வீதிபுறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 7.05.2021 | 24 | ஏகாதசி | வெள்ளி | பூரட்டாதி | கடைவெள்ளி. காலை தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை தாயார் உள்புறப்பாடு. | ஸ்ரீ ஸேதுராமன் |
| 8.05.2021 | 25 | த்வாதசி | சனி | உத்தரட்டாதி | திருமால்வடை | |
| 9.05.2021 | 26 | த்ரயோதசி | ஞாயிறு | ரேவதி | திருமால்வடை | |
| 10.05.2021 | 27 | சதுர்தசி | திங்கள் | அச்வினி | திருமால்வடை | |
| 11.05.2021 | 28 | அமாவாசை | செவ்வாய் | பரணி | செல்வர் உத்ஸவம் | ஸ்ரீ D.N.S. குடும்பத்தார் |
| 12.05.2021 | 29 | ப்ரதமை | புதன் | க்ருத்திகை | அங்குரார்ப்பணம். மாலை ஸேனைநாதன் வீதிபுறப்பாடு. | ஸ்ரீ N. சேஷாத்ரி |
| 13.05.2021 | 30 | த்விதீயை | வியாழன் | ரோஹிணி | அதிவாஸம். த்வஜபடம். மாலை வீதிபுறப்பாடு. த்வஜபட கருட ப்ரதிஷ்டை | ஸ்ரீ A.L. ரங்கமணி |
| 14.05.2021 | 31 | திருதீயை | வெள்ளி | ம்ருகசீர்ஷம் | த்வஜாரோஹணம். அதிகாலை 3 மணி முதல் 4.30 மணிக்குள் – மீன லக்னம். காலை – பவழக்கால் சப்பரம் வீதிபுறப்பாடு. பின்பு திருமஞ்சனம். மாலை சிம்ஹவாஹனம் | த்வஜாரோஹணம் – SVDD அர்ச்சகர்கள். காலை உத்ஸவம்: ஸ்ரீரகுபதி – ஸ்ரீ ஸ்ரீராம். மாலை உத்ஸவம் உபயம். ஸ்ரீ K. வேணுகோபாலன் |


**ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு**

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான
(G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

# 20. Sri Godha Sthuthi

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Sri Godha – or Andal as She is familiarly known – assumes a unique status in our Sampradaya, a dual role in fact. She is Consort of the Lord on the one hand and the lone female Azhwar on the other. In Her former role, She combines the qualities of Bhu Devi and Neela Devi and hence is considered as an incarnation of both. A matchless masterpiece in ThirupPavai and an aesthetic extravaganza soaked in devotion in Naachiyar Thirumozhi are Her contribution as an Azhwar (173 verses in all).

Swami Desika sings, in Sri Godha Sthuthi, the glory of Andal in 29 beautiful verses. Like ThirupPavai, Godha Sthuthi also has a special place in the Tamil month of Margazhi in which it is recited with verve and devotion in temples and homes alike.

Another invocation – third in succession – with 'surrender' as the theme, sets the hymn rolling, so to say. The author pleads with Godha for succour as he says: "I surrender to Godha as I have none else to take refuge in. She is the 'Kalpa' creeper in the garden (called) Periyazhwar family, the one which charmingly entwines the sandal tree by the name (Lord) Rangaraja. She is the embodiment of forbearance, a hallmark of Bhu Devi, and for sheer compassion, She is virtually Sri Devi."

In the next Sloka, Sri Desika explains why he cannot refrain from composing this hymn, despite his limitations as a poet. In an expression of imaginative brilliance couched in subtle self-deprecation, he says: "O Godha! Your greatness is out of the grasp of even the Vedas. That being the case, I knew for sure that there was no question of my words getting the measure of the same and hence remained silent. But Your virtues would have none of it. They are hell bent on breaking my silence and making me speak out."



He promptly follows it up with a prayer to Godha to bless him with the power of poesy marked by lucidity and clarity of diction, in extolling Her glory.

The pun employed on the word 'Vishnu Chiththam' in the ninth Sloka while recalling Andal's birth and drawing a parallel to Mahalakshmi's is quite delectable. Both are off-springs of 'Vishnu Chiththa'. Godha is the daughter of Periyazhwar, also known as Vishnu Chiththa and Mahalakshmi was born in the Milky Ocean which positions Vishnu as its heart (Vishnu Chiththam). He goes on: "Discernible scholars perceive You as the sister of Periya Piraatti. You shower charming coolness through Your poetry, while Sri Devi does it through Her compassion. In beauty, You are akin to the Moon and as the Moon was born out of the Ocean a la Mahalakshmi, Yourself and Periya Piraatti are siblings."

In the next sloka, Sri Desika explains how Vishnu Chiththa became 'Periyazhwar'. Addressing Andal, he states, "The Lord is normally inclined to be pleased by a mere trace of admiration. Your father sang hundreds of verses – 473 to be precise – in His praise, yet He was not so much pleased as to confer on him the honorific 'Periyazhwar' (the Great Azhwar) until he presented Him with the garlands rendered fragrant by the contact



**Sri Andal and Rangamannar, Srivilliputhur**

of Your hair-locks." The fact that no other Azhwar received the honour corroborates the viewpoint that it is all because of Andal.

Our Acharya visualises the loving exchange of garlands by Lord Ranganatha and Andal during their marriage, in Sloka No. 21. He notes that here, as is the practice in the world in wedding functions, a section of connoisseur devotees present is of the view that the Lord is superior to Andal, another section sides with Andal and the rest favour them both equally. Their debate on the subject is echoing in all the three worlds.

Forbearance, Godha Piraatti's special quality, is highlighted with an apt analogy in Sloka No. 27. Swami Desika observes, "O Godha! You are my Mother. I commit lots of sins but still You protect me. It is perfectly in the fitness of things, for, the mother though bitten in the breast by a suckling infant, not only endures the pain but, out of natural love, nourishes him also."

In the penultimate verse which serves as Dhyana Sloka, the author succinctly captures the salient features of Andal. "May Godha Piraatti – daughter of Vishnu Chiththa, shining and dark-hued like a sapphire, holding a beautiful water lotus in Her hand, with a posture rendered bent by well-laden breasts, an ocean of compassion for Her devotees, one who captivated the Lord by offering Him the garland She wore on Her head – ever shine in our hearts."

And finally, the Phala Sruti, from which it is evident that this is yet another Sthothra named by Swami Desika himself. "A hymn of multifarious merits and magnificence, Godha Sthuthi originated from the fully-blossomed and mature devotion of Venkatesa. One who recites this will be blessed with eternal service at the lotus feet of Lord Ranganatha and Periya Piraatti and remain an object of great esteem to the Divya Dampathis", is how the benediction is assured by the author.

*To be continued…*

ஸ்ரீ:


கண்ணுக்கினியன



பங்குனி உத்தரம் உத்ஸவம்











பங்குனி உத்தரம் உத்ஸவம்









பங்குனி உத்தரம் உத்ஸவம்



ஸ்ரீ:



பங்குனி உத்தரம் உத்ஸவம்













ஊர்கோல உத்ஸவம்









பஞ்சபர்வ உத்ஸவங்கள்











பஞ்சபர்வ உத்ஸவங்கள்



பங்குனி - ச்ரவணம் ஆஸ்தானம்



ஸ்ரீ:





வெள்ளிக்கிழமை உத்ஸவங்கள்





ஶ்ரீ:

# அருளிச்செயலில் பாகவதர்களின் பெருமை - 5
# கண்சோர - பெரிய திருமொழி 7-4

ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

திருநறையூர் அநுபவத்திற்குப் பிறகு திருமங்கை யாழ்வார் திருச்சேறை என்னும் திவ்ய தேசத்திற்கு எழுந்தருள்கிறார். இதற்கு பஞ்சஸார க்ஷேத்ரம் என்று பெயர். அதாவது :-

பெருமாள் – ஸ்ரீ ஸாரநாதன்
தாயார் – ஸ்ரீ ஸாரநாயகி
விமானம் – ஸாரவிமானம்
புஷ்கரிணி – ஸாரபுஷ்கரிணி
க்ஷேத்ரம் – ஸாரக்ஷேத்ரம்

இப்படி எல்லாம் ஸாரமாயிருக்கவே, தமது ஸாரமான அநுபவம் இங்கு ஆகவேண்டுமென்று ஆழ்வார் கருதினார்.

ஆறாம் பத்தின் இறுதியில் **''நமோ நாராயணமே''** என்று திருவஷ்டாக்ஷரத்தின் பொருள்கள் அநுபவிக்கப்பெற்றன. முடிவாக தர்சந ஸ்மாநாகாரமான அவனது தோற்றம் தொடர்ந்து வரப்பெற்றமை தெரிவிக்கப்பட்டது. அந்த நிலைமையில் **''மணிக்குன்றினையன்றி என்மனம் போற்றியென்னாதே''** என அநந்ய பக்தியும் கூறப்பெற்றது. 'அநந்ய' என்றபோது, பாகவதர்களும் விலக்கப்பட்டார்களென்று கொள்ளலாகாது. பாகவத பக்தியைச் சேர்க்காத பகவத் பக்தி, பக்தி ஸ்வரூப விருத்தமே.

எம்பெருமான் ஸாரநாதனானமை, க்ஷேத்ரம் ஸாரமானதால் மட்டுமின்றி, ஸாரர்களுக்கு அவன் நாதன் ஆனமையாலுமாம். ஸாரராவார் நித்யஸூரிகளல்லர், அவர்களாகில் அவன் இங்கே வரவேண்டாமே. வேறு பலனுக்காக அவனை ஆச்ரயிப்பாரைப் போல், மோக்ஷத்திற்காக அவனை ஆச்ரயிப்பாரும், அவனே உபாயமென்று விரைவில் மோக்ஷம் பெற ப்ரபத்தியை அநுஷ்டித்தவரும் ஸாரராக மாட்டிலர்.

பகவத் கைங்கர்யத்தைவிட, பாகவத கைங்கர்யமே பெரிதென்றும், அது பரமபதத்தில் கிடைப்பது அரிதென்றும் கண்டு, இங்கே இருந்து அதனைச் செய்பவர்களே ஸாரர்களென்று முடிவுசெய்து, அந்நிலை தமக்கும் வரவேண்டுமென்று கருதி, இதுவே பாகவதக்ஷேத்ரமென்று திருவஷ்டாக்ஷரத்தின் ஸாரப்பொருளை அருளிச்செய்கிறார் திருமங்கை மன்னன்.

இத்திருமொழியை திருமங்கையாழ்வாரின் **''நெடுமாற்கடிமை''** என்பர் பூர்வர்கள். அதாவது, நம்மாழ்வாரின் **''நெடுமாற்கடிமை''** என்ற



*தண்சேறை எம்பெருமான்*

திருவாய்மொழிபோல், இத்திருமொழியும் பாகவதர்கள் விஷயமாகும்.

மேலும், நம்மாழ்வார் பாகவதர்கள் விஷயமாக **''பயிலும் சுடரொளி''** என்று வேறு திருவாய்மொழியும் அருளிச்செய்து இருக்கிறார். கலியனும், அதற்கு ஈடாக, திருக்கடன்மல்லை எம்பெருமான் விஷயமாக **''நண்ணாத வாளவுணர்''** என்ற பாகவதர்கள் பெருமை பேசும் திருமொழியை அருளிச்செய்துள்ளார். இதை நாம் சென்ற மாத இதழில் அநுபவித்தோம்.

இப்படி, இத்திருமொழியில் பாகவதர்களிடத்தில் போக்யத்வமுள்ளது கூறப்படுகிறது. பகவத் ஸாக்ஷாத்காரம் வந்தவுடன், பாகவதர்களிடம் ஆநுகூல்யபுத்தி வளர்கிறபடியாலும், இங்கே போக்யத்வம் பொருந்தும். சேஷித்வத்திற்கு மேலாகும் போக்யத்வம் என்று, பாகவத தாஸ்யத்தின் பெருமையை இத்திருமொழியில் கீழ்க்கண்டவாறு அருளிச் செய்கிறார்.

*1. கண்சோர வெங்குருதி வந்திழிய வெந்தழல்போல் கூந்தலாளை ★*
*மண்சேரமுலையுண்ட மாமதலாய் வானவர் தம் கோவே என்று ★*
*விண்சேரும் இளந்திங்கள் அகடுரிஞ்சு மணிமாடமல்கு ★ செல்வத்*
*தண்சேறையெம்பெருமான் தாள்தொழுவார் காண்மின் என் தலைமேலாரே.*

இம்முதல் பாசுரத்தில் பாகவதர்களைக் கண்டவுடன் வணங்குவது கூறப்படுகிறது.

நெருப்பு போல், செம்பட்டை நிறமான கூந்தலையுடைய பூதனை, கண்கள் சோர்ந்து

வெம்மையான ரத்தமெல்லாம் அவள் தன் முலைவழியே வெளியில் பெருக, மாளும்படி செய்து, அவளிடத்தில் ஸ்தந்ய பானம் பண்ணிய மேன்மை பொருந்திய சிறுபிள்ளையானவனும், நித்யஸூரிகளுக்கும் நாதனுமானவனும், இளமையுள்ள சந்திரனுடைய கீழ்வயிற்றைத் தொடுகின்ற ரத்னமாளிகைகள் நிறைந்த ஸம்பத்து மிக்க குளிர்ந்த திருச்சேறை என்னும் திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் திருவடியைத் தொழுகின்றவர்கள் தம்மால் சிரஸாவஹிக்கப்படுகின்றனர் என்பதை இப்போதே நிரூபிக்கிறேன் என்கிறார் திருமங்கை மன்னன்.

இப்படி, தம்மால் ஸேவிக்கப்பட்ட இந்த ஸாரநாதனுடைய பக்தர்கள், பெரியபிராட்டியார் எம்பெருமானின் திருமார்பில் எப்பொழுதும் நித்யவாஸம் செய்துகொண்டிருப்பது போல, தம் மனத்திலும் நித்யமாக இருக்கின்றனர் என்கிறார் கீழ்வரும் பாசுரத்தில்.

*2. அம்புருவவரி நெடுங்கண் அலர்மகளை வரையகலத்தமர்ந்து ★ மல்லல்*
*கொம்புருவ விளங்கனிமேல் இளங்கன்று கொண்டெறிந்த கூத்தர்போலாம் ★*
*வம்பலரும் தண்சோலை வண்சேறை வானுந்து கோயில்மேய ★*
*எம்பெருமான் தாள்தொழுவார் எம்பொழுதும் என்மனத்தே இருக்கின்றாரே.*

அழகிய புருவங்களை உடையவளும், நீண்ட கண்களை உடையவளுமான திருமகளை தன் மலை போன்ற திருமார்பில் அமர்ந்திருக்கப் பெற்றவனும், மஹத்தான கிளைகளைக் கொண்ட விளாமரத்தின் பழங்களின் மேல், இளம் கன்று ஒன்றைக் கையில் கொண்டு சுழற்றி எறிந்து கூத்தாடியவனும், மணம் வீசுகின்ற குளிர்ந்த சோலைகளையுடைய, விலக்ஷணமான திருச்சேறையில், ஆகாயத்தைத் தள்ளுகின்ற நீண்ட விமானத்திலே எழுந்தருளி யிருக்கின்ற எம்பெருமான் ஸாரநாதனுடைய திருவடிகளை ஸேவிப்பவர்கள், எப்பொழுதும் தன் மனத்தே இருக்கின்றார்கள் என்கிறார் ஆழ்வார்.

*3. மீதோடிவாளெயிறு மின்னிலக முன்விலகும் உருவினாளை ★*
*காதோடு கொடிமூக்கன்றுடனறுத்த கைத்தலத்தா என்று நின்று ★*
*தாதோடு வண்டலம்பும் தண்சேறையெம்பெருமான் தாளையேத்தி ★*
*போதோடு புனல்தூவும் புண்ணியரே விண்ணவரில் பொலிகின்றாரே.*

அநந்த, கருட, விஷ்வக்ஸேனாதிகள், எம்பெருமானைப் போன்றவர்கள். இங்குள்ள பாகவதர்கள், ப்ரஹ்ம, ருத்ராதி, தேவாதாந்தரங்கள் போல ஸம்ஸாரிகள். அவர்களை விடுவது போல் இவர்களையும் விடுவதே தகும். இதனால் எப்பொழுதும் மனத்தில் இருக்கின்றாரென்பது தகாதென, இவர்களின் பெருமையை இப்பாசுரத்தில் விளங்க அருளிச் செய்கிறார் கலியன்.

ஒளிவீசும் பற்களையுடையவளும், மின்னல்போல் ப்ரகாசிக்கும் உருவையுடையவளும், சூர்ப்பனகையை, அவள் காமரூபியாய் வந்து தவித்தபோது, அவளுடைய காதுகளையும், கொடி போன்ற மூக்கையும் ஒரே ஸமயம் அறுத்த, ''ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:'' என்னப்பட்ட லக்ஷ்மணனைத் தன்னிடத்தில் உடையவனே! என்றவாறு அழைத்து, மதுபானம் செய்யும் போது படிந்த பூந்தாதுக்களுடன் வண்டுகள் சஞ்சரித்து ரீங்காரம் செய்யும் இடமான குளிர்ந்த திருச்சேறை எம்பெருமானுடைய திருவடித் தாள்களைத் தம் கை களில் வைத்து உபசரித்து, சிறந்த புஷ்பங்களைக் கொண்டு, தீர்த்தத்தினால் ஆராதிக்கின்ற மஹாபாக்யம் பெற்ற பாகவதர்கள், நித்யஸூரிகளை விட சிறப்பாக விளங்குவார் என்கிறார் ஆழ்வார்..

*4. தேராளும் வாளரக்கன் தென்னிலங்கை வெஞ்சமத்துப் பொன்னிவீழ ★*
*போராளும் சிலையதனால் பொருகணைகள் போக்குவித்தாயென்று ★ நாளும்*
*தாராளும் வரைமார்பன் தண்சேறையெம்பெருமான், உம்பராளும் ★*
*பேராளன் பேரோதும் பெரியோரை ஒருகாலும் பிரிகிலேனே.*

பாகவதர்கள் இல்லாத இடத்தில் தனியே இருந்தாலும் அவர்கள் மனத்தில் நிற்பர்கள். அவ்வாறின்றி, அவர்களோடு ஸஹவாஸத்தையே தான் விரும்புகிறவன் என்கிறார் ஆழ்வார் இப்பாசுரத்தில்.

தென்னிலங்கையில் உக்ரமான போர்க்களத்திலே, பலதேர் கொண்டுவந்த, வாளை முக்கியமான படையாகக் கொண்ட ராக்ஷஸனான ராவணன், நசித்து விழும்படி, யுத்தத்தை நிர்வஹிக்கும் ஒப்பற்ற வில்லால், போருக்கான அம்புகளை அவனிடம் செல்வித்தவனே! என்றவாறு, பல பெரிய மாலைகளைப் பெற்று விளங்கும், மலைபோன்ற திருமார்பை உடையவனும், குளிர்ந்த திருச்சேறையில் எழுந்தருளியிருக்கும் நம் ஸ்வாமியானவனும், மேலுலகங்களை ஆள்கின்றவனும், பெருமை பொருந்தியவனுமான பிரானின் திருநாமங்களை எல்லா நாளிலும் வேதம்போல் ஜபித்து வருகின்ற பெரியோர்களான மஹாத்மாக்களை ஒருநாள் கூடத் தாம் பிரியமாட்டேன் என்கிறார் மங்கைவேந்தன்.

*5. வந்திக்கும் மற்றவர்க்கும் மாசுடம்பில் வல்லமணர் தமக்கும் அல்லேன் ★*
*முந்திச்சென்றரியுருவாய் இரணியனை முரணழித்த முதல்வர்க்கல்லால் ★*
*சந்தப்பூ மலர்ச்சோலைத் தண்சேறையெம்பெருமான் தாளை ★ நாளும்*
*சிந்திப்பார்க்கு என்னுள்ளம் தேனூறி எப்பொழுதும் தித்திக்குமே.*

பெரியார் என்றபோது ''மஹாத்மாநஸ்து மாம் பார்த்த தைவீம் ப்ரக்ருதிம் ஆச்ரிதா: பஜந்த்யநந்ய மநஸோ ஜ்ஞாத்வா பூதாதிம் அவ்யயம்'' என்றது நினைவுற, அந்நிலையற்றவரான வைதிக, அவைதிக வகுப்புக்களைக் காட்டி, அவர்களோடு ஸம்பந்தம் வெறுத்த ப்ரஹ்லாதாழ்வானிடம் பரிவுற்ற நரசிங்கமூர்த்தியை நினைத்து அவனிடம் ஈடுபட்டு, அத்தகைய மஹான்களைச் சுவைக்கும் தம் மனமென்கிறார் ஆழ்வார் இப்பாசுரத்தில்.

ப்ரஹ்லாதாழ்வான் சொன்னபோதே, ஹிரண்யனை அழிக்கும் சிங்கவுருவு கொண்டு, அவனுடைய

முரட்டுத்தனத்தை அழித்தவனான ஆதிப்பிரானுக்கு அடிமையாகாமல், மற்றவரை வணங்கிவரும் (முன்சொன்ன பரமைகாந்திகள் தவிர) மற்ற வைதிகர்களுக்கும், அழுக்கை நீக்காத உடம்புடன் உள்ள ஜைனர்கள் போன்ற அவைதிகர்களுக்கும் சேஷனாக மாட்டேன். சந்தன மலர்கள் மலர்ந்த சோலைகளைக் கொண்ட, குளிர்ந்த திருச்சேறையில் எழுந்தருளியிருக்கும் ஸாரநாதனின் திருவடிகளை தினந்தோறும் நினைத்து

வருகின்றவர்களுக்கே தம் மனமானது, அவர்களைச் சுவைப்பதாக தேன் ஊற்றெடுத்து எம்பொழுதும் தித்திக்கும் என்கிறார் பரகாலன்.

இப்பாசுரத்தில் ஆழ்வார் மற்றவரை உபேக்ஷிப்பதற்குக் காரணம், அவர்கள் முதல்வனான எம்பெருமானுக் கல்லாமல், வேறிடம் அடிமைகொண்டதேயாம்.

*6. பண்டேனமாய் உலகை அன்றிடந்த பண்பாளா என்று நின்று ★*
*தொண்டானேன் திருவடியே துணையல்லால் துணையிலேன் சொல்லுகின்றேன் ★*
*வண்டேந்தும் மலர்ப்புறவில் வண்சேறையெம்பெருமான் அடியார் தம்மை ★*
*கண்டேனுக்கு இதுகாணீர் என்னெஞ்சும் கண்ணிணையும் களிக்குமாறே.*

இப்படி பாகவத தாஸ்யம் கொண்டால், பகவத் தாஸ்யம் விடப்பட்டதாகுமோ என்ன, இப்பொழுதே எம்பெருமானுக்கு நின்று தொண்டனானேன் என்கிறார் ஆழ்வார் இப்பாசுரத்தில்.

வெகுகாலத்திற்கு முன் பூமி ஸமுத்ரத்தில் அமிழ்ந்தபோது, வராஹ அவதாரமெடுத்து, அப்பூமியை முழுவதும் பெயர்த்தெடுத்த மஹாகுணம் உடையவனே! என நினைத்து, அந்தக் குணத்தில் ஈடுபட்டு அடிமையானதையும், அவன் திருவடியே அல்லது ஸ்வாமியான அவனே தமக்குச் சரணம், அதுவன்றி வேறு சரணமில்லை என்பதை உறுதியாகச் சொல்கிறேன் என்கிறார். இப்படி, பகவத்தாஸ்யம் தமக்கு ஏற்படக்காரணம், தேன் அருந்தும் வண்டு களைத் தாங்கி நிற்கும் புஷ்பங்கள் நிறைந்த சோலைகளையுடைய விலக்ஷணமான திருச்சேறையில் எழுந்தருளியிருக்கும் ஸாரநாதனுக்கு தாஸரானவர்களைத் தரிசனம் செய்ததால் ஏற்பட்டது என்பதாக மங்கையர் கோனின் திருவுள்ளம்.

பகவானுக்கு மட்டும் அடிமையாய், பாகவதர்க்கு அடிமையாகாத போது, அவன் திருவடி துணையாக வில்லை. அவர்களைக் கண்டு களித்துக் கண்ணீர் சொரிந்து இருக்கப் பெற்றபோது, எம்பெருமானின் திருவடி துணையென்பது திடமாயிற்று என்கிறார் ஆழ்வார்.

*7. பைவிரியும் வரியரவில் படுகடலுள் துயிலமர்ந்த பண்பா என்றும் ★*
*மைவிரியும் மணிவரைபோல் மாயவனே என்றென்றும், வண்டார் நீலம் ★*
*செய்விரியும் தண்சேறையெம்பெருமான் திருவடியைச் சிந்தித்தேற்கு ★ என்*
*ஐயறிவும் கொண்டானுக்கு ஆளானார்க்கு ஆளாம் என் அன்புதானே.*

திருப்பாற்கடலைக் கடைந்த போது சிறந்த பலவஸ்துக்கள் அதில் உண்டாயின. அமுதம் அவற்றில் முக்கியமானது. அமுதிலும் முக்கியாமானது அப்பாற்கடலில் இருந்து தோன்றிய இன்னமுதமான பெரிய பிராட்டியேயாம். அப்படி அவள் தோன்றின இடமென்று அத்திருப்பாற்கடலிலே ப்ரீதி வைத்து அங்கே நிலைத்து சயனித்த எம்பெருமான், அனைவருக்கும் பலன் அளிப்பவனானான்.

இப்படி திருப்பாற்கடலிலே, படவிரிவு மற்றும் கோடுகள், புள்ளிகள் கொண்ட அழகான திருவனந்தாழ்வானில் திருக்கண்வளரும், குணமுள்ளவனே! பிராட்டிக்கும், பக்தர்களுக்கும் வசமானவனே! என்றவாறும், கருநிறம் பரவிய நீலரத்னமலை போலிருக்கும் மாயனே, மாதவனே என்றவாறும், வண்டுகள் நிறைந்த கருநெய்தல் புஷ்பங்கள் கொண்ட நீர்நிலங்களை விரிவாகப்பெற்ற குளிர்ந்த திருச்சேறையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருவடிகளைச் சிந்திக்கும் தமக்கு, அச்சிந்தை காரணமாக, வெளி இந்த்ரியங்களின் அறிவையெல்லாம் அபஹரித்தானென்று கண்டு அவனுக்கு அடிமையானவர்களுக்கு, அன்பே வடிவான தம் மனம் தானாகவே ஆளாகின்றது என்கிறார் மங்கை மன்னன்.

*8. உண்ணாது வெங்கூற்றம் ஓவாத பாவங்கள் சேரா ★ மேலை*
*விண்ணோரும் மண்ணோரும் வந்திறைஞ்சும் மென்தளிர்போல் அடியினானை ★*
*பண்ணார வண்டியம்பும் பைம்பொழில்சூழ் தண்சேறையம்மான் தன்னை ★*
*கண்ணாரக் கண்டுருகிக் கையாரத் தொழுவாரைக் கருதுங்காலே.*

நம்மை நமன் நலியாதபடி, நம் பாவங்களைப் போக்கும் ப்ரபாவம் பாகவதர்களுக்கு உண்டென்கிறார் இப்பாசுரத்தில்.

பரமபதமென்ற விண்ணிலிருப்பவரும், ப்ரக்ருதியிலிருப்பவரும் வந்து வணங்கும்படியாக, மெல்லிய தளிர்போன்ற திருவடியை உடையவனும், ஸ்வரங்கள் நிரம்ப, வண்டுகள் ஒலிக்கும் இடமாய், பசுமையான சோலைகள் சூழப்பெற்ற குளிர்ந்த திருச்சேறைக்கு ஸ்வாமியானவனை, கண்கள் நிறைய தரிசனம் செய்தும், மனம் உருகப்பெற்றும், கைகள் நிறைய வணங்குமவரான பாகவதர்களை நினைக்கும்போதே, இடைவிடாமல் பரவும் பாவங்கள் எல்லாம் போய், கொடிய யமனும் நம்மைத் தன் வசமாக்கமாட்டான் என்கிறார் ஆழ்வார்.

இங்கு ''உண்ணாது வெங்கூற்றம்'' என்றது, பாவங்கள் செய்பவர்களை யமன் தனது ஆளுகைக்கு உட்படுத்தி, நரகத்திலே அவர்களை ஆங்காங்கு பலன்களை அநுபவிக்கச் செய்து ஆளுகை செலுத்தினோம் என்று களிப்பது. அது பாகவதர்களை எப்பொழுதும் நினைப்பவர்களுக்கு நேராது என்பதனை திடமாகச் சொல்லுகிறது இப்பாசுரம்.

*9. கள்ளத்தேன் பொய்யகத்தேன் ஆதலால் போதொருகால் கவலையென்னும் ★*
*வெள்ளத்தேற்கு எங்கொலோ? விளைவயலுள் கருநீலம் கலைஞர் தாளால்*
*தள்ள ★ தேன்மணநாறும் தண்சேறையெம்பெருமான் தாளை ★ நாளும்*
*உள்ளத்தே வைப்பாருக்கு இதுகாணீர் என்னுள்ளம் உருகுமாறே.*

எண்ணற்ற இடையூறுகள் இருந்தும், இந்த பாகவதபக்தி தமக்கு மேலிட்டது ஆச்சர்யமென்கிறார் இப்பாசுரத்தில் கலியன்.

கள்ளமே செய்கின்றவன், பொய்க்கே இடமுடையவன், அது காரணமாய், போகும் காலமெல்லாம், துக்கம் என்கிற ப்ரவாஹத்தில் ஆழ்ந்த தமக்கு, நெல்விளையும் நிலங்களிலே, கருநெய்தல்களை களை பறிக்கின்றவர்கள் தங்களுடைய காலால் அப்பால் ஒதுக்கும் போது பெருகிய தேனின் வாசனை வீசும் இடமான தண்சேறை எம்பெருமானை உள்ளத்தே வைத்திருக்கும் பாகவதர்களின் பால் தம் உள்ளம் உருகும்படி ஆயிற்றே. இது என்ன ஆச்சர்யம்! இதற்கான காரணத்தைற்கு தம்மால் அறியமுடியவில்லை என்பதாக ஆழ்வார் விவரிக்கிறார்.

மநோ-வாக்-காயங்களால் எவ்வளவு பாவம் செய்தவர்களுக்கும், அவற்றைச் செய்ததாலான துக்கவெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப் பெற்றவருக்கும், பாகவதர்களிடத்தில் பக்தி ஏற்பாட்டால் அவையெல்லாம் விலகும். ஆக ‘‘ஓவாத பாவங்கள் சேரா’’ என்று முன்னே சொன்னதைத் தன்னை உதாரணமாக்கிக் கண்டேன் என்றபடி.

*10. பூமாண்சேர் கருங்குழலார்போல் நடந்து வயல்நின்ற பெடையோடு ★ அன்னம்*
*தேமாவினின்னிழலில் கண்துயிலும் தண்சேறையம்மான் தன்னை ★*
*வாமாண்தேர்ப்பரகாலன் கலிகன்றி ஒலிமாலை கொண்டுதொண்டீர் ★*
*தூமாண்சேர்ப் பொன்னடி மேல் சூட்டுமின் நும் துணைக்கையால் தொழுதுநின்றே.*

பாகவதர்கள் விஷயத்தில் உள்ளம் உருகினால் வரும் பலன் மேல் இரண்டு பாசுரங்களில் தெளிவானபடியால். இத்திருமொழியை ஓதுமவர்க்கும் அது பயனென விளங்கிற்று. எனவே, பலன் தனியே சொல்வதென்? என வைத்து, இத்திருமொழியை எம்பெருமானின் திருவடியில் ஸமர்ப்பிக்கும்படி ஓதுங்கள் என்றதை மட்டும் அருளிச்செய்கிறார்.

பூவின் அழகுடன் சேர்ந்த கரிய கூந்தலுடைய ஸ்த்ரீகள் போல், கழனியில் நின்ற பெண் அன்னங்களோடு நடந்தபிறகு அன்னப் பறவைகள், மதுரமான மாமரத்தின் இனிய நிழலில் உறங்குமிடமான, குளிர்ந்த திருச்சேறையில் எழுந்தருளியிருக்கும் ஸாரநாதனை, உங்களுக்கு ஸஹாயமான கைகளால் ஸேவித்திருந்து, தாவுகின்ற குதிரைகளையுடைய தேரிலிருக்கும் பரகாலன், கலிகன்றி என்ற ஆழ்வாரின் சொல்மாலையான இந்தப் பத்து பாசுரங்களை, பக்தர்களே உங்கள் வாயாரச்சொல்லி, பரிசுத்தமான மாட்சிமை கொண்ட அவ்வெம்பெருமானுடைய அழகிய திருவடிகளில் ஸமர்ப்பியுங்கள்! என்று இத்திருமொழிக்குப் பலனை அருள்கிறார் ஆழ்வார்.

இத்திருமொழியில், திருச்சேறை எம்பெருமானைத் தொழும் பாகவதர்களிடம் ஈடுபட்டு, அதன்மூலம் அவனது அருள்பெற்றுப் பிறரையும் பெறுவிக்கிறார். முதற்பாசுரத்தில் பூதனா ஸம்ஹாரம் செய்தவனிடம் ஈடுபட்ட பெரியார் என்றும், 2-ல் வத்ஸாஸுர ஸம்ஹாரம் செய்த திருமால் விஷயமான பற்றும், 3-ல் சூர்ப்பனகைக்குச் செய்த பரிபவம், 4-ல் ராவண ஸம்ஹாரம், 5-ல் ஹிரண்ய ஸம்ஹாரம், 6-ல் வராஹாவதாரம், 7-ல் திருப்பாற்கடலில் திருப்பள்ளி கொண்டிருப்பு, 8-ல் அங்கு நின்று, மண்ணோரும், விண்ணோரும் தொழும்படி திருச்சேறையில் அர்ச்சையாய் அவதாரம், 9ல் தம் நீச நிலையும், தமக்குக் கிடைத்த பாகவத ப்ரவணமான நெஞ்சும், 10-ல் இவ்வறு முன் விபவங்களில் போல் அர்ச்சையிலும் ஈடுபடும் படி விளங்குமவனைத் தொழத் தம் பாசுரங்கள் பாங்காக அமைந்திருக்கை எல்லாம் கூறப்பெற்றது. ✻

## சித்திரையில் முக்கிய உத்ஸவங்கள்

| | |
|---|---|
| **சித்திரை வருஷப்பிறப்பு**<br>ஏப்ரல் 14 (புதன்) | **மதுரகவிகள் திருநக்ஷத்ரம்**<br>ஏப்ரல் 26 (திங்கள்) |
| **ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்ரம்**<br>ஏப்ரல் 18 (ஞாயிறு) | **சித்ரா பௌர்ணமி**<br>ஏப்ரல் 26 (திங்கள்) |
| **ஸ்ரீராமநவமி**<br>ஏப்ரல் 21 (புதன்)<br>**ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்**<br>ஏப்ரல் 22 (வியாழன்) | **ஸஹஸ்ர கலசாபிஷேகம்**<br>மே 4 (செவ்வாய்)<br>**கடை வெள்ளிக்கிழமை**<br>மே 7 (வெள்ளி) |
| **திரு அவதார உத்ஸவம்**<br>ஏப்ரல் 25 (ஞாயிறு) | **ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ப்ரஹ்மோத்ஸவம் (10 நாட்கள்)**<br>மே 14 (வெள்ளி) முதல் 23 (ஞாயிறு) வரை |

ஸ்ரீ:

# உத்தரத்தில் உத்தரம் பெற்றுயர்ந்த உத்தமர்

ஸ்ரீமதி அனுராதா சேஷாத்ரி, பெங்களூரு

பல்வகையாய் மணம் பரப்பிய பங்குனிப்பூ வாய் மூடி பிலவச் சித்திரையாம் செங்கழுநீர்வாய்நெகிழும்இவ்வேளையை வேத விளக்காம் வேங்கடநாதனையும் மற்றும் வேதாந்தவாரியனாம் நம் ஆசார்ய ஸார்வபௌமனையும் அருள் வேண்டி அடிபணிந்து ஆவலுடன் வரவேற்போம்!

வேரிமாறாத பூ மேலிருக்கும் பெரிய பிராட்டியார் மஹாலக்ஷ்மி தாயாரையும் காரிமாறன் அடி பணிந்துய்ந்த நம்மிராமானுசனையும் ஒரு சேர நம் கண் முன்னே நிறுத்திய ஓர் உத்தமமான நாளாம் பங்குனி உத்தரத்தின் பெருமைதான் என்னே! பிராட்டியின் திருவவதாரம் மற்றும் திருக்கல்யாண மஹோத்ஸவமும் நடைபெற்றது இந்த பங்குனி உத்தர நன்னாளில் என்று பெரியோர் பணிப்பர். இந் நன்னாளிலேயே பெரிய பெருமாளும், பெரிய பிராட்டியுமான அந்த அபூர்வமான சேர்த்தியில் அவ்வரங்க மாநகரில் ஏக ஸிம்ஹாஸனத்தில் எழுந்தருளியிருந்த ஸமயத்தில், ஜகதாசார்யரான ஸ்வாமி ராமாநுஜர் அத்திவ்ய தம்பதிகளின் திருவடியில் சரணம் அஹம் ப்ரபத்யே என்று சரணாகதியை அநுஷ்டித்து திவ்யமான கத்யத்ரயம் அருளிச்செய்தார். இக்காரணத்தினாலேயே பங்குனி மாதம் என்றாலேயே அனைவருக்கும் மனதில் குதூஹலமும், உத்ஸாஹமும் உண்டாகும். இவ்வருடமும் இந்த உத்ஸவம் பல திவ்ய தேசங்களிலும் ஆச்சர்யமாக நடந்தேறியது. இதனை நேரில் சென்று ஸேவிக்கும் பாக்கியம் பெற்றவர்கள் பலர். ஆனால் தற்போது உள்ள சூழலினால் காணொலி மூலம் அந்த திவ்ய ஸேவையை அநுபவித்தவர், நேரில் சென்று என்று கொலோ **என் கண் இணைகள் காணும் நாளே** என்று இருப்பவரும் பலர். இத்தருணத்தில், அம்ருதமாகிய இப்பிராட்டியின் வைபவத்தையும், ஆசார்ய வள்ளல் இவ்வுலகில் உள்ளோர் உய்வதற்காக நிகழ்த்திய அத்புதத்தையும் அகம் குளிர சற்றே அநுபவிப்போம்!

**திவ்யதம்பதிகளின் அவதாரம் :** அடியார்களின் துன்பத்தைப் போக்குவதற்காகவும் அவர்களைக் காப்பதற்காகவும்



நம்பெருமாள் சேர்த்தி

எம்பெருமான் **சரணாகத ரக்ஷணம்** என்னும் தீக்ஷையை ஏதத் வ்ரதம் மம என்று மேற்கொண்டுள்ளான். இதற்காகப் பல்வேறு திருமேனிகளை ஏற்று பல அவதாரங்களைச் செய்கின்றான். இப்படி எம்பெருமான் திருவவதாரம் செய்யும் காலங்களில் எல்லாம் ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் கூறியபடி நித்யயேஷா ஜகன்மாதா விஷ்ணோர் ஸ்ரீ: அநபாயிநி என்று பகவானை விட்டு ஒரு போதும் பிரியாமல் அகலகில்லேன் இறையும் என்றிருப்பவளான பிராட்டியும் எம்பெருமானின் அவதார ரூப, ஸ்வரூபங்களுக்கேற்ப ஸம தநு: என்கிறபடி ஒத்த திருமேனியுடன் அவதரிக்கின்றாள். அவன் ராமனாக அவதரிக்கும் போது ஸீதையாகவும், அவன் க்ருஷ்ணனாக வரும் போது ருக்மிணியாகவும் அவதரிக்கிறாள்.

எம்பெருமானும் பிராட்டியும் இணை பிரியாத தத்வங்கள் என்பதை ஓர் அபூர்வமான உவமானத்துடன் விளக்குகிறார் ஸ்வாமி தேசிகன், **ஆபந்நார்த்தி ப்ரசமந விதௌ...** என்று தொடங்கும் ஸ்ரீ ஸ்துதி ச்லோகத்தில். எம்பெருமானின் அவதாரங்களைப் பற்றி எடுத்தியம்புகிறார். அந்த அவதாரங்கள் திருப்பாற்கடலிலிருந்து உண்டாகும் அலைகள் போன்றவை! அவ்வலைகள் வெகுதூரம் சென்று வீசினாலும், அந்த அலைகளிலிருந்து தெறிக்கும் ஒரு சிறு திவலையிலும் பாலின் சுவை குறையாமல் இருக்கும் அல்லவா! பாலும் அதன் ஸ்வாபாவிகமான இனிமையும் பிரிக்க முடியாதது போல, பாற்கடலின் அலைகள் எம்பெருமானின் அவதாரங்களாக எழும் பொழுதெல்லாம் அந்தப் பாலின் சுவையாக பிராட்டியும் உடன் அவதரிக்கின்றாள். ஆக இந்த கருத்தொருமித்த திவ்ய தம்பதிகள், அவதார காலங்களிலும் இணைந்தே ரக்ஷண காரியங்களைப் புரிகின்றனர்.

**ஸமுத்ர மதனம்:**

எம்பெருமான் ஒரு ஸமயம் தேவர்களுக்கு அம்ருதம் அளிப்பதற்காக கூர்மாவதாரம் கொண்டு பாற்கடலை மதனம் செய்தான். **பெண்ணாகி இன்னமுதம் வஞ்சித்தானை** என்கிறபடி இதற்காகவே மோஹினி உருவமும் கொண்டான். இவ்வளவன்றி எம்பெருமான் தேவர்களையும் அஸுரர்களையும் ஒரு வ்யாஜமாக கொண்டு தானே திருப்பாற்கடலைக் கடைந்தான்!

**மாயிருங் குன்றமொன்று மத்தாக....**
**ஆயிரந்தோளால் அலைகடல் கடைந்தான்**
**அரங்கமா நகர் அமர்ந்தானே.**
**வலிமிக்க வாள் நாகம் சுற்றி மறுகக் கடல் கடைந்தான்**

என்று பலவாறாக எம்பெருமானின் இச்செயலை ஆழ்வார்கள் அநுபவிக்கின்றனர்.

**பிராட்டியின் ஆவிர்பாவம்: அமுதில் வரும் பெண்ணமுது:**

திருப்பாற்கடலைக் கடைந்த பொழுது அதினின்று உச்சைச்ரவஸ் என்கிற குதிரை, ஐராவதம் என்கிற யானை, கல்பக வ்ருக்ஷம், காமதேனு, பலவிதமான ரத்னங்கள் போன்ற வஸ்துக்கள் வெளி வந்தன என்று ஸ்ரீ விஷ்ணு புராணம் கூறுகின்றது. தேவர்கள் வேண்டிய உயர்ந்த வஸ்துவான அம்ருதமும் திரண்டு வந்தது. ஆனால் இவற்றையெல்லாம் விட ஸர்வ உத்க்ருஷ்டமான வஸ்துவாக, அமுதில் வரும் பெண்ணமுது, பெண்ணமுதாம் இன்னமுது என பிராட்டி ஆவிர்பவித்தாள். தேவர்களுக்கு அமுதம் தருவதற்காக மட்டுமன்றே பகவான் கடல் கடைந்தது! அமுதினும் இனிய பிராட்டியை பெறுவதற்கன்றோ இத்துணை கார்யங்களை செய்தான் ஆராவமுதமாகிய அவ்வெம்பெருமான்!

**பிராட்டியின் பட்டாபிஷேகம்:**

இப்படி ஸ்வர்ண காந்தியுடன் கூடிய ஸௌந்தர்ய திருமேனியுடன் தோன்றினாள் பிராட்டி. இதன் பிறகு நடந்த நிகழ்வுகளை ஸ்வாமி தேசிகன் 25 ச்லோகங்கள் கொண்ட தாம் அருளிச்செய்த ஸ்ரீ ஸ்துதி என்னும் ஸ்தோத்ர க்ரந்தத்தின் ரத்னம் போன்று நடுநாயகமாக விளங்கும் பதிமூன்றாவது ச்லோகத்தில் ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் உள்ளபடி பெரிய பிராட்டியை ஸர்வலோகேச்வரியாக பட்டாபிஷேகம் செய்யும் வைபவத்தை அத்புதமாக விவரிக்கின்றார்.

**அக்ரே பர்த்து: ஸரஸிஜமயே பத்ரபீடே நிஷண்ணாம்...** என்கிற ச்லோகத்தில் அமுதினும் இனியவளாகத் தோன்றிய பெரிய பிராட்டியார் மஹாலக்ஷ்மி தாயார் தன்னுடைய பர்த்தாவான ஸர்வலோக நாயகனின் நேர் எதிரே பட்டாபிஷேகம் கண்டருளிய வைபவத்தை ஸ்வாமி தேசிகன் அநுபவித்த ப்ரகாரத்தைக் காண்போம்!

இப்படி திருப்பாற்கடலில் அவதரித்த பிராட்டிக்கு தேவேந்த்ரன் தாமரை மலராகிய மங்கள பீடத்தை ஸமர்ப்பித்தான். பிராட்டியின் ஆவிர்பாவத்தினால் ஆனந்தத்தை அடைந்த புஷ்கலாவர்த்தம் எனப்படும் பெரு மேகங்கள், புஷ்ப வ்ருஷ்டி போன்று நீரை தாயாரின் திவ்ய திருமேனியில் வர்ஷித்தன. இந்த பெரும் பொழிவில் உலகங்களனைத்தும் மறைக்கப்படுகின்றனவாம்! இப்படி மேகங்களால் திருமஞ்ஜனம் செய்யப்பட்ட பிராட்டியை திக்கஜங்கள் பூரண பொற்குடங்களில் பவித்ரமான நீரைக் கொண்டு பட்டமஹிஷியாக பட்டாபிஷேகம் செய்கின்றன என்று ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்கிறார்.

எம்பெருமானுக்கு ஸ்ரீ, பூமி, நீளா ஆகிய மூன்று தேவிமார்கள் இருந்த போதிலும் பட்டாபிஷேகம் கண்டருளிய பெரிய பிராட்டியார் ஸ்ரீதேவி ஒருவரே அவனுக்கு மஹிஷீ ஆவாள். தேவ தேவ திவ்ய மஹிஷீ... என்றல்லவோ துதிக்கின்றார் ஸ்வாமி ராமானுஜர்! இவ்வண்ணம் பர்த்தாவான எம்பெருமான் முன்னிலையில் தாயாரின் பட்டாபிஷேகம் ஆச்சர்யமாக நடந்தேறியது. இதுவும் அவன் திருவுள்ள உகப்பிற்கென்றே ஏற்பட்ட ஓர் அத்புதமான வைபவம்.

**பிராட்டியின் ஸ்வயம்வரம்:**

மஹாலக்ஷ்மி தாயாரின் ஸ்வயம்வரம் என்னும் ஸ்வாரஸ்யமான நிகழ்வினை ஸ்ரீமத் பாகவதம் மற்றும் ஸ்ரீ விஷ்ணு புராணம் மிக அழகாக விவரிக்கின்றன.

**பச்யதாம் ஸர்வதேவானாம் யயௌ வக்ஷ:ஸ்தலம் ஹரே:** என்பதாக தேவர்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, அவர்களை நிராகரித்துவிட்டு அத்திண்தோள் மணிவண்ணனின் திருமார்பை அடைந்து அதையே தன் வாஸஸ்தலமாகக் கொண்டு அகலகில்லேன் இறையும் என்று மன்னி வீற்றிருக்கின்றாள். இத்தால் எம்பெருமானோ பூ மன்னு மாது பொருந்திய மார்பன் என்னும் புகழை உடையவனானான்!

**பந்திருக்கும் மெல் விரலாள் பாவை பணிமலராள்**
**வந்திருக்கும் மார்வன் நீலமேனி மணிவண்ணன்...**

என்று இவ்வாறு எல்லாப் பெருமையையும் இவன் பெற்றது லக்ஷ்மிக்கு வல்லபனானதாலேயே. மஹாலக்ஷ்மியின் ஸம்பந்தத்தினால் தான் பகவானுக்கே ஏற்றம் என்பது நம் பூர்வர்கள் திருவுள்ளம். இவ்வண்ணம் எம்பெருமானை திருக்கல்யாணம் செய்து கொண்டாள் லக்ஷ்மி தேவி.


**தேவர்கள் லக்ஷ்மீ கடாக்ஷம் பெற்றனர்:** முதலில் தாயாரின் திருமஞ்ஜன வைபவத்தைக் கண்ட தேவர்கள் மிகுந்த ஸந்தோஷமடைந்தனர். மேலும் பிராட்டி எம்பெருமானின் வக்ஷஸ்தலத்தை அடைந்த அற்புதமான காட்சியை கண்டவுடன் அவர்களுடைய ஆனந்தம் பன்மடங்காயிற்று. எம்பெருமான் பிராட்டியின் சேர்த்தியில் தேவர்கள் அனைவரும் தம் தம் தேவிமார்களுடன் அவர்களை சரணடைந்தார்கள். கருணையே வடிவான தாயார் அனைவரையும் குளிர கடாக்ஷித்தாள்.

முன் ஒரு காலத்தில் துர்வாஸ முனிவர் கொடுத்த தாயாரின் ப்ரஸாதமாகிய திவ்ய மாலையை அவமதித்ததால் அவருடைய சாபத்துக்கு ஆளாகி ராஜ்யலக்ஷ்மியை இழந்த இந்திரன், பிராட்டியின் கடாக்ஷ விசேஷத்தினாலும் அருளாலும் அதை மீண்டும் பெற்றான். இப்படித் திருவருள் பெற்றதால்

நீங்காத செல்வம் நிறைந்து அனைவரும் பேரானந்தத்தை அடைந்தனர்.

**பவித்ரமான பங்குனி உத்தரம்:**

பிராட்டியின் ஆச்சர்யமான ஆவிர்பாவம், விசேஷமான திருக்கல்யாணம், மற்றும் தன் திவ்ய கடாக்ஷத்தால் நிகழ்த்திய அத்புதமும் இவற்றோடு காரேய் கருணை இராமனுசன் சரணாகதி சாஸ்த்ரத்தை இவ்வுலகில் ப்ரகாசமடையும்படி, ஸ்ரீரங்கத்தில், தாயாரை முன்னிட்டுக் கொண்டு, பெருமானும், பிராட்டியுமான சேர்த்தியிலே த்வத் பாதாரவிந்தயுகளம் சரணமஹம் ப்ரபத்யே என்று சரணாகதி அநுஷ்டித்துக் காட்டிய உன்னதமான நாள் பங்குனி உத்தர திருநாள். சரண்ய தம்பதிகளின் சேர்த்தியிலே அவர்கள் திருவடியிலே சரணம்புகும் ஒரு சரணாகதனின் சேர்த்தியும்! நேர்த்தியான இச்சேர்த்தியைக் காண கண் கோடிதான் வேண்டாமோ!



*ஸ்ரீ பாஷ்யகாரர்*

**கத்ய த்ரயம்:**

சரணாகதி கத்யம், ஸ்ரீ ரங்க கத்யம் மற்றும் ஸ்ரீ வைகுண்ட கத்யம் ஆகிய மும்மணிகளும் இராமநுசன் என்னும் மாநிதி நமக்கு க்ருபையுடன் வழங்கிய பொக்கிஷமாகும். இந்த மூன்று கத்யங்கள் மூலம் திவ்ய தம்பதிகளிடம் தாம் சரணாகதி அநுஷ்டித்த விதத்தினை அற்புதமாக விவரிக்கின்றார்.

**சரணாகதி கத்யம்: ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ...** என்று கீதாசார்யன் அருளிச் செய்த ப்ரகாரம், ஸ்வாமி இராமாநுஜர், சரணாகதியே எம்பெருமானை அடைவதற்கான சிறந்த உபாயம் என்கிற உண்மை நல் ஞானம் உரைத்தது சரணாகதி கத்யத்தில். ஸ்ரீ பாஷ்யகாரர் பூர்வாசார்யர்களின் வழியைப் பின்பற்றி, சேர்த்தியில் தன்னால் அநுஷ்டிக்கப்பட்ட சரணாகதியை தம் திருவடி ஸம்பந்தம் பெற்றவர்களும் பின்பற்றி உஜ்ஜீவிக்க வேண்டும் என்கிற கருணை உள்ளம் கொண்டு முறை மாறாது அழகாக விவரிக்கிறார்! முதலில் தாயாரை முன்னிட்டு புருஷகார ப்ரபத்தியை செய்கின்றார். எம்பெருமானின் சீற்றத்துக்கு ஆளாகாமல் அநுக்ரஹமயீயான பிராட்டியை முன்னிட்டுக் கொண்டே எம்பெருமானை சரணடைய வேண்டும் என்கிற ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் உயர்ந்த கொள்கையை இவ்வாறு உணர்த்துகிறார். பெரிய பிராட்டியின் அநுக்ரஹம் பெற்று எம்பெருமானிடம் தன் சரணாகதியை ஏற்குமாறு ப்ரார்த்திக்கின்றார்!

இந்த ப்ரார்த்தனையை பெருமாள் ஏற்றுக்கொண்டாரா என்னும் கேள்விக்கு, இவ்வுத்திர நக்ஷத்ர நன்னாளில் பெருமாளின் அநுக்ரஹத்துடன் கூடிய உத்தரத்தையும் (பதில்) பெற்றுக் கொண்டாரே! நிஸ்ஸம்சயஸ் ஸுகமாஸ்வ! என்றல்லவோ பதில் கிடைத்தது!

சரணாகதி கத்யம், த்வய மந்த்ரத்தின் விவரணமாக அமைந்துள்ளது என்பது நம் பூர்வாச்சார்யர்களின் திருவுள்ளம்.

**ஸ்ரீ ரங்க கத்யம்:** இதில் கல்யாண குணஸாகரனும், அகிலஹேயப்ரத்யநீகனான எம்பெருமானிடம் அகிஞ்சனனான தமக்கு ஸர்வ தேச, ஸர்வ கால கைங்கர்ய ப்ராப்தியை அருளுமாறு ப்ரார்த்திக்கிறார். ஸ்ரீமந் நாரயணனே கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்ளும் திறனை உடையவன் என்பதை அழகாக விளக்குகிறார். ஆக இந்த ஸ்ரீ ரங்க கத்யத்தில், **ஓதிய வேதத்தின் உட்பொருளாய் அதன் உச்சி மிக்க சோதியே எல்லா உயிர்கட்கும் நாதனான அரங்கன்** என்னும் பொருள் சுரந்தது நம்மிராமானுசன் என்னும் புண்ணியனாலே!

**ஸ்ரீ வைகுண்ட கத்யம்:** சரணாகதி என்கிற உபாயத்தினால் அடையப்படும் உயர்ந்த பலனான பரமபதம் எனப்படும் திவ்ய லோகமான ஸ்ரீ வைகுண்டத் தின் மேன்மைகளையும், பரமபதநாதனான ஸ்ரீ வைகுண்டநாதனின் பெருமைகளையும் அற்புதமாக வர்ணிக்கின்றார். **பரந்தாமமெனும் திவம் தரும் தீதில் இராமாநுசன் தன்னைச் சார்ந்தவர்க்கு** என்கிற அமுதனார் வாக்குப்படி, பரமபதத்தின் வாசல் திறந்து அற்புதமான திவ்ய ஸேவை நம் கண் முன்னே விரிவது ஸ்ரீ வைகுண்ட கத்யத்திலே!

**கருணயா கமலாம் இவ அந்யாம்** என்னும்படி விளங்கும் கோதை நாச்சியார் தாம் சூடிக் கொடுத்த பூ மாலையை எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்தாள். பாடிய இரு பாமாலையும் நமக்கு கிட்டியது பாக்கியவசத்தால்! அது போல ஸ்வாமி ராமானுஜர் செய்த சரணாகதி அத்திவ்ய தம்பதிகளின் திருவடிகளுக்கு ஸமர்ப்பணம் ஆயிற்று. அவ்வமயத்தில் .இந்த பூதலம் காப்பதற்கென்று மும்மணிக்கோவையாக அவர் பாடிக்கொடுத்த கத்ய த்ரயம் நமக்குக் கிட்டியது அஹோபாக்யம்! சித்திரையின் ஆதிரையில் வந்துதித்த உத்தமராம் இவ்வாசார்ய வள்ளலின் அடி பணிந்து, அவருடைய கருணா கடாக்ஷத்தினால் எங்கும் திருவருள் பெற்று இன்புற்றிருக்க திவ்ய தம்பதிகளை ப்ரார்த்திப்போமாக!

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:



*With Pranams:*

**V.C. Muralidharan & Family**


Apartment No. 3014-C, Krest Park,
39, Kanakapura Road, Basavanagudi,
Bengaluru 560 004.

**SVDD thanks Sri V.C. Muralidharan & Family for sponsoring this month's issue of Desika Sandesam**


24




ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம் - ஆஸ்தானம்



பங்குனி உத்தரம் - திருக்கல்யாண உத்ஸவம்